# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2340/02 - 2023 ජූලි මස 10 වැනි සඳුදා - 2023.07.10

*2340/02 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.-பி5/2022*

***2022 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*2022 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் மதியுரையின் மீதும் விதப்புரையின் மீதும், அச்சட்டத்தின் 5 ஆம் மற்றும் 6 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**கஞ்சன விஜயசேகர,**
மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர்.

கொழும்பு,
*2023, யூலை 10.*

**கட்டளை**

*1.* இவ்வொழுங்குவிதிகள், *2023* ஆம் ஆண்டின் *1* ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் உரிமமளித்தல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* இவ்வொழுங்குவிதிகள், விண்ணப்பகாரரொருவருக்கும் மற்றும் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் பெற்றோலியத்தை இறக்குமதி செய்வதற்கு, ஏற்றுமதி செய்வதற்கு, விற்பனை செய்வதற்கு, வழங்கல் செய்வதற்கு அல்லது விநியோகம் செய்வதற்கு இவ்வொழுங்கு விதிகளின் கீழ் உரிமமொன்று வழங்கப்பட்ட எவரேனுமாளுக்கும் அல்லது ஏதேனும் ஆட்கள் குழுவுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.


1A - G 39861 — 07 (2023/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பாகம் I**

**உரிமமொன்றை வழங்குவதற்கான நிபந்தனைகள்**

*3. (1) எவரேனுமாள் அல்லது ஏதேனும் ஆட்கள் குழு, இச்சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழான உரிமமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக (இதனகத்துப் பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.*

*(2) ஓராம் உப ஒழுங்குவிதியின் கீழான விண்ணப்பமொன்று, பொருளளவில் செயலாளரினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.*

*(3) ஓராம் உப ஒழுங்குவிதியின் கீழான விண்ணப்பம் ஒவ்வொன்றும், பெற்றோலியத் துறையினதும் தேசியப் பொருளாதாரத்தினதும் தேவைப்பாடுகளின் நலன்கருதி, பெற்றோலியத்தை இலங்கைக்கு இறக்குமதி செய்வதனை, இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதனை அல்லது இலங்கையில் விற்பனை செய்வதனை, வழங்கல் செய்வதனை அல்லது விநியோகம் செய்வதனை நிறைவேற்றுவதற்கென, (இதனகத்துப்பின்னர் "விண்ணப்பகாரர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (1) ஆம் உப ஒழுங்குவிதியின்கீழ் விண்ணப்பமொன்றைச் செய்கின்ற எவரேனுமாளின் அல்லது ஏதேனும் ஆட்கள் குழுவின் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆற்றலை உறுதிப்படுத்துகின்ற முன்மொழிவொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.*

*4. மூன்றாம் ஒழுங்குவிதியின் (1) ஆம் மற்றும் (3) ஆம் உப ஒழுங்குவிதிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பத்தையும் முன்மொழிவையும் கவனத்திற் கொள்வதில், பெற்றோலியத்தின் இறக்குமதியை, ஏற்றுமதியை, விற்பனையை, வழங்குகையை அல்லது விநியோகத்தை நிறைவேற்றுவதற்கு விண்ணப்பகாரருக்குள்ள நிதி மற்றும் தொழில்நுட்ப ஆற்றலுடன் தொடர்புபட்ட தொழிற்றுறை நியமங்களை அடிப்படையாகக் கொண்டு, (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவினால் முறையானதொரு மதிப்பீடும் உரிய விழிப்புக் கவனமும் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.*

*5. அமைச்சர், (இதனகத்துப்பின்னர் "உரிமமளிக்கப்பட்ட செயற்பாடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பெற்றோலியத்தை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு, இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு அல்லது இலங்கையில் விற்பனை செய்வதற்கு, வழங்கல் செய்வதற்கு அல்லது விநியோகிப்பதற்கு சட்டத்தின் 5 ஆம் பிரிவின் நியதிகளின்படி விண்ணப்பகாரரொருவருக்கு உரிமமொன்றை அளிக்கின்றவிடத்து, அத்தகைய விண்ணப்பகாரர் –*

*(அ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாக இல்லாதிருப்பின், அச்சட்டத்தின் கீழ் கம்பெனியொன்றாகக் கூட்டிணைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்;*

*(ஆ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினதும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் ; அத்துடன்*

*(இ) எச்செயற்பாட்டுக்காக உரிமமளிக்கப்படுகின்றதோ அச்செயற்பாட்டைக் கவனத்துட்கொண்டு குழுவினால் குறித்துரைக் கப்பட்ட வேறேதேனும் அதிகார சபையுடன் ஒப்பந்தமொன்றைச் செய்தல் வேண்டும்.*

*6. அமைச்சரினால் அளிக்கப்பட்ட உரிமத்தின்கீழ் எந்த உரிமமளிக்கப்பட்ட செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு விண்ணப்ப காரர் அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ, அந்த உரிமமளிக்கப்பட்ட செயற்பாட்டை அத்தகைய உரிமம் குறித்துரைத்தல் வேண்டும்.*

*7. (இதனகத்துப்பின்னர் "உரிமம் பெற்றவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உரிமமொன்று அளிக்கப்பட்ட விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும், இவ்வொழுங்கு விதிகளின் கீழும் மற்றும் காலத்துக்குக்காலம் அவற்றுக்குச் செய்யப்பட்ட திருத்தங்களின் கீழும் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய உரிமமளிக்கப்பட்ட செயற்பாட்டை நிறைவேற்றுதல் வேண்டும்.*

**பாகம் II**

**உரிமமொன்றுக்கு ஏற்புடையற்பாலனவான பொதுவான நிபந்தனைகள்**

*8. உரிமம்பெற்றவர், 5 ஆம் ஒழுங்குவிதியின் (இ) என்னும் பந்தியின் கீழ் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்பட்ட நியதி நிபந்தனைகளுக்கு இசைந்தொழுகி, 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்குச்*

சொந்தமான தொழில் பொறுப்புமுயற்சிகளை பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுதல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் பந்தியின் கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்டதும் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டதுமான ஒரு பகிரங்கக் கம்பனியாகவுள்ள சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் அன்ட் டேர்மினல்ஸ் லிமிட்டட்டிடமிருந்து உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

9. உரிமம் ஒவ்வொன்றும்-

(அ) இரண்டு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்ட (ஐ.அடொ 2,000,000) உரிமக் கட்டணமொன்று செலுத்தப்படுவதன் மேல், இருபது (20) ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதிக்குச் செல்லுபடியாதல் வேண்டும்;

(ஆ) கைமாற்றப்படத்தக்கதாதல் ஆகாது ; அத்துடன் (இ) புதுப்பிக்கப்படத்தக்கதாதல் வேண்டும்.

(2) உரிமம்பெற்ற ஒவ்வொருவரும், செயலாளரினால் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர், ஒவ்வோராண்டிலும் இரண்டு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்ட (ஐ.அடொ 2,000,000) உரிமக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(3) உரிமம் பெற்றவரொருவர், செயலாளரினால் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் (1) ஆம் உப ஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமக் கட்டணத்தைச் செலுத்தத் தவறுகின்றவிடத்து, அத்தகைய உரிமம்பெற்றவருக்கு அளிக்கப்பட்ட உரிமம் அத்தேதியிலிருந்து பயனுறுவதாக இல்லாதாக்கப்படுதல் வேண்டும்.

(4) (அ) உரிமம் பெற்றவரொருவர், உரிமத்தின் ஏதேனும் நிபந்தனையை மீறுகின்றவிடத்து, இடைநிறுத்துவதற்கான காரணங்களைக் குறித்தளித்து செயலாளரினால் அத்தகைய உரிமம் இடைநிறுத்தப்படலாம்.

(ஆ) செயலாளர், (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இடைநிறுத்துகையின் தேதியைக் குறிப்பிட்டு உரிமம் பெற்றவருக்கு அத்தகைய இடைநிறுத்துகை பற்றி அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் திருத்த வழிமுறைகளை எடுக்கும்படி உரிமம்பெற்றவரைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

(இ) உரிமம் பெற்றவரினால் திருத்த வழிமுறைகள் எடுக்கப்பட்டதன் மேல், அத்தகைய வழிமுறைகள் தொடர்பில் செயலாளர் திருப்தியுறுகின்றவிடத்து, அவர் இடைநிறுத்துகையை மீளப்பெறலாம்.

10. (1) மேலுமொரு காலப்பகுதிக்கு உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்கு உட்கருதுகின்ற எவரேனும் உரிமம்பெற்றவர், அத்தகைய உரிமம் முடிவடையும் தேதிக்கு முன்னர் ஆறு (6) மாதங்களுக்குக் குறையாமல், செயலாளரினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் செயலாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், 3 ஆம் ஒழுங்குவிதியின் (3) ஆம் உப ஒழுங்குவிதிக்கு இணங்கவுள்ள முன்மொழிவொன்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் கீழ் உரிமத்தின் புதுப்பித்தலை வழங்குதல் தொடர்பில் 4 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

11. உரிமம்பெற்ற ஒவ்வொருவரும், உரிமமளிக்கப்பட்ட செயற்பாட்டை நிறைவேற்றுவதில் நுகர்வோரின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதையும் மற்றும் "பெற்றோலிய உற்பத்திப் பொருட்களினது நுகர்வோரின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் நிறுவுவதன் மூலமும் மற்றும் முறைப்பாடுகளைக் கையாண்டு பிணக்குகளைத் தீர்ப்பதன் மூலமும் அவர்களுக்குத் தத்துவமளித்தல்" என்னும் தலைப்பிலான அமைச்சரவை முடிபை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தினால் நுகர்வோர்கள் பற்றி வழங்கப்பட்ட பணிப்புக்கள் அல்லது வழிகாட்டுநெறிகள் இசைந்தொழுகப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

12. உரிமம்பெற்ற ஒவ்வொருவரும், அவரினால் நிறைவேற்றப்பட்ட உரிமமளிக்கப்பட்ட செயற்பாட்டுக்கு ஏற்புடையற் பாலதான ஒவ்வோர் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம், 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் அத்துடன் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் என்பனவுட்பட உரிமம்பெற்றவருக்கு ஏற்புடையற்பாலதான ஒவ்வோர் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

## பாகம் III

### குறித்தசில உரிமம்பெற்றவர்களுக்கு ஏற்புடையற்பாலனவான விசேட நிபந்தனைகள்

*13.* உரிமம்பெற்ற ஒவ்வொருவரும், காலத்திற்குக் காலம் இலங்கை அரசாங்கத்தினால் குறித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கும் நடவடிக்கை முறைகளுக்கும் அமைய உரிமமானது எந்த பெற்றோலியம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ளதோ அந்த பெற்றோலியத்தை விநியோகித்தல் வேண்டும்.

*14.* பெற்றோலியத்தை ஏற்றுமதி செய்வதற்கு உரிமமொன்று வழங்கப்பட்ட எவரேனும் உரிமம்பெற்றவர் அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட விசேட நிபந்தனைகளுக்கமைய அத்தகைய செயற்பாட்டை நிறைவேற்றுதல் வேண்டும்.

## பாகம் IV

### பொதுவானவை

*15.* இவ்வொழுங்கு விதிகளில்–

"சட்டம்" என்பது, 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் எனப் பொருள்படும்.

EOG 07 - 0069

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.